**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | |
|---|---|
| Case Number | : CC.No.20/2024 |
| Deposition of Witness for | : PW – 4 |
| Name and Age | : நரசிம்மன் (வயது 55) |
| Father / Husband Name | : கிருஷ்ணன் |
| Occupation | : விவசாயம் |
| Village | : பன்னிக்கொட்டாய் |
| Taluk | : பாலக்கோடு |

**நாள்** – 27.04.2026

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**A3 Present. A1 and A2 absent. Petition U/s. 355 of BNSS filed and allowed.**

**PW– 4**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் பன்னிக்கொட்டாயில் குடியிருந்துக்கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். தேதி மாதம் வருடம் நினைவில்லை சுமார் மூன்று வருடங்களுக்கு முன்பாக பகல் சுமார் 12.00மணியளவில் ஜெயாவின் நிலத்தில் முருகன், கோவிந்தராஜ், ஆறுமுகம் ஆகியோர் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். 100 மீட்டர் தொலைவில் உள்ள எனது நிலத்தில் இருந்தேன். சண்டை போட்டு முடிந்தபிறகு தான் எனக்கு தெரியும். பத்துநாட்கள் கழித்து போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து என்னிடம் சாட்சியாக இருக்கும்படி கேட்டார்கள். சண்டை போட்டது ஊரில் உள்ள எல்லோருக்கும் தெரியும். நான் சண்டையை விலக்கிவிட்டேன். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சி செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

20.09.2023ம் தேதி காலை சுமார் 11.00மணிக்கு முருகன் அவரது நிலத்தில் வேலை செய்துக்கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி ஜெயா மற்றும் முருகன் கோவிந்தராஜ் ஆகியோர் அங்கு வந்து முருகனை கெட்டவார்த்தையால் திட்டி கீழே தள்ளினார்கள் என்றும், முருகனின் மகன்

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.04.27 18:03:13 +0530

ராஜிவ்காந்தி சம்பவ இடத்திற்கு வந்து அவருடைய அப்பா முருகனை அழைத்துச்சென்றார் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவர்களை பின்தொடர்ந்து வந்த எதிரி கோவிந்தராஜ் ராஜிவ்காந்தியின் தோள்பட்டையால் கையால் அடித்தார் என்றும் எதிரி ஆறுமுகம் கட்டையால் ராஜிவ்காந்தியின் தலையின் மீது அடித்தார் என்றும், எதிரி ஜெயா அரிவாளால் முருகனின் இடதுபக்க தலையின் மீது அடித்து ரத்தகாயம் ஏற்படுத்தினார் என்றும் ராஜீவ்காந்தியை எதிரி கோவிந்தராஜிம், அறுமுகமும் பிடித்துக்கொள்ள எதிரி ஜெயா அரிவாளால் பின்தலையில் வெட்டி ரத்த காயம் ஏற்படுத்தினார் என்றும், மீண்டும் இடதுபக்க முழங்கையில் வெட்டி ரத்த காயம் ஏற்படுத்தினார் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சண்டை நடந்தபோது நானும், ராஜேந்திரனும் நிலத்தில் இருந்தோம் என்றால் சரியல்ல, எதிரிகள் முருகனை கொல்லாமல் விடமாட்டேன் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நாங்கள் ஒரே ஊரைச் சார்ந்தவர்கள் ஆஜர் எதிரி எனது உறவினர் ஆவார். ஆஜர் எதிரி எனது உறவினர் அவருக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.04.27 18:03:19 +0530

Judicial Magistrate,
Palacode.

**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No.20/2024 |
| Deposition of Witness for | : | PW – 5 |
| Name and Age | : | ராஜேந்திரன் (வயது 70) |
| Father / Husband Name | : | கிருஷ்ணன் |
| Occupation | : | விவசாயம் |
| Village | : | பன்னிக்கொட்டாய் |
| Taluk | : | பாலக்கோடு |

**நாள்** – 27.04.2026

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**A3 Present. A1 and A2 absent. Petition U/s. 355 of BNSS filed and allowed.**

**PW-5**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் பன்னிக்கொட்டாயில் குடியிருந்துக்கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும், அவர் எனக்கு உறவினர் ஆவார். தேதி, மாதம், வருடம் நினைவில்லை காலை சுமார் 11.00மணியளவில் ஆஜர் எதிரியும் ராஜிவ்காந்தி, கோவிந்தராஜ் ஆகியோருடைய நிலத்தில் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள் நான் அரை கிலோ மீட்டர் தூரமுள்ள எனது மாங்காய் தோட்டத்தில் நான் இருந்தேன். நிலத்தகராறு சம்மந்தமாக சண்டை போட்டிருப்பார்கள். நான் அந்த பக்கம் வரும்போது என்னுடைய பெயர் விலாசம் விசாரித்தார்கள். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சி செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

20.09.2023ம் தேதி காலை சுமார் 11.00மணிக்கு முருகன் அவரது நிலத்தில் வேலை செய்துக்கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி ஜெயா மற்றும் முருகன் கோவிந்தராஜ் ஆகியோர் அங்கு வந்து முருகனை கெட்டவார்த்தையால் திட்டி கீழே தள்ளினார்கள் என்றும், முருகனின் மகன் ராஜிவ்காந்தி சம்பவ இடத்திற்கு வந்து அவருடைய அப்பா முருகனை அழைத்துச்சென்றார் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன்

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.04.27 18:03:26 +0530

என்றால் சரியல்ல. அவர்களை பின்தொடர்ந்து வந்த எதிரி கோவிந்தராஜ் ராஜிவ்காந்தியின் தோள்பட்டையால் கையால் அடித்தார் என்றும் எதிரி ஆறுமுகம் கட்டையால் ராஜிவ்காந்தியின் தலையின் மீது அடித்தார் என்றும், எதிரி ஜெயா அரிவாளால் முருகனின் இடதுபக்க தலையின் மீது அடித்து ரத்தகாயம் ஏற்படுத்தினார் என்றும் ராஜீவ்காந்தியை எதிரி கோவிந்தராஜிம், அறுமுகமும் பிடித்துக்கொள்ள எதிரி ஜெயா அரிவாளால் பின்தலையில் வெட்டி ரத்த காயம் ஏற்படுத்தினார் என்றும், மீண்டும் இடதுபக்க முழங்கையில் வெட்டி ரத்த காயம் ஏற்படுத்தினார் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சண்டை நடந்தபோது நானும், நரசிம்மனும் நிலத்தில் இருந்தோம் என்றால் சரியல்ல, எதிரிகள் முருகனை கொல்லாமல் விடமாட்டேன் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நாங்கள் ஒரே ஊரைச் சார்ந்தவர்கள் ஆஜர் எதிரி எனது உறவினர் ஆவார். ஆஜர் எதிரி எனது உறவினர் அவருக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.04.27 18:03:31 +0530

Judicial Magistrate,
Palacode.

**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | |
|---|---|
| Case Number | : CC.No.20/2024 |
| Deposition of Witness for | : PW – 6 |
| Name and Age | : வெங்கடேஷ் (வயது 60) |
| Father / Husband Name | : ராமச்சந்திரன் |
| Occupation | : விவசாயம் |
| Village | : பன்னிக்கொட்டாய் |
| Taluk | : பாலக்கோடு |

**நாள்** – 27.04.2026

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**A3 Present. A1 and A2 absent. Petition U/s. 355 of BNSS filed and allowed.**

**PW-6**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் பன்னிக்கொட்டாயில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது அண்ணன் மனைவி ஆவார். தேதி, மாதம் வருடம் நினைவில்லை ஒருநாள் மதியம் சுமார் 03.00மணிக்கு போலிசார் சம்பவம் நடந்த இடத்தில் வரைபடம் வரைந்துக்கொண்டிருந்தார்கள். நான் அந்தவழியாக செல்லும் போலிசார் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். என்னுடன் சேர்ந்த சௌடப்பன் மகனும் கையொப்பம் செய்தார். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **பார்வைமகஜர் அ.சா.ஆ.2–ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

பார்வைமகஜரில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் செய்தேன். நான் சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள சாலையில் கையொப்பம் செய்தேன். வழக்கு சம்பவ பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.04.27 18:03:39 +0530

Judicial Magistrate,
Palacode.